பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 23 | செவ்வாய்க்கிழமை | 08.08.2023 | அதிர்வு 07


## பம்பலப்பிட்டியில் காரை இலக்கு வைத்துச் சூடு!

### மதுவரி அதிகாரிகள் நால்வர் கைது

கொழும்பு – பம்பலபிட்டி பகுதியில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியில் நேற்றுப் பிற்பகல் கார் ஒன்றை இலக்கு வைத்து துப்பாக்கி பிரயோகம் 03▶

# இந்த அரசுக்கு எதிராகவும் போராட்டத்துக்கு முஸ்தீபு

## தூண்டுதல் நடக்கிறது என இரகசிய அறிக்கை ஜனாதிபதிக்குப் புலனாய்வுப் பிரிவு சமர்ப்பிப்பு



**கொழும்பு, ஓகஸ்ட் 08**

நாட்டில் மீண்டும் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தூண்டுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இரகசிய அறிக்கையொன்றை வழங்கியுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 03▶

## ‘13’ குறித்து அச்சப்படாதீர்!

### தெற்குக்கு பிள்ளையான் ‘அட்வைஸ்’!



**கொழும்பு, ஓகஸ்ட் 08**

13ஆவதுதிருத்தச்சட்டம்தொடர்பில்கடும்போக்கு அரசியல்வாதிகளின் கருத்துக்களால் தென்னிலங்கை மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். 02▶

## நாளை ரணில் நாடாளுமன்றில் ‘13’ பற்றி உரை

நாடாளுமன்றம் இன்று 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நாளை விசேட உரையாற்றவுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வககட்சி மாநாட்டை ஜனாதிபதி நடத்தியிருந்தார். கட்சிகளின் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே 13 இன் 02▶

## வயது வித்தியாசக் காதலால் ஒருவர் அடித்துக் கொலை!

### சுன்னாகத்தில் நடந்த விபரீதம்



யாழ்ப்பாணம் – சுன்னாகத்தில் காதாலால் ஏற்பட்ட அடிதடி காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.

19 வயது காதலியுடன் வீட்டை விட்டு வெளியேறிய 54 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே ஊரவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனத் 03▶

## இரகசியம் / பரகசியம்



நேற்றுப் பிற்பகலில் இருந்து தமிழ் ஊடகப் பரப்பில் ‘ட்ரெண்டிங்’ ஆகப் போன செய்தி அல்லது விவகாரம் ஸ்ரீகாந்தா – சிவாஜிலிங்கம் இடையேயான ஊடல் பற்றிய விடயம்தான்.

இதில் அரசியல் 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரகசியத்துக்குள் இறங்க முன்னர், ஒரு தடவை இவ்விடயத்தை ஒட்டிய – ஊடலைப் பற்றிய – திருக்குறளையும் ஒரு நோட்டம் பார்த்துக் கொள்வோம்.

"ஊடுதல் காமத்துக்கின்பம் – அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்" என்றான் செந்நாப்போதகன் வள்ளுவன்.

காமத்துக்கு இன்பம் தருவது ஊடுதலாகும். ஊடல் முடிந்த பின் கூடித் தழுவல் பெற்றால் அந்த ஊடலுக்கு இன்பமாகும் என்பார்கள் உரையாசிரியர்கள்.

அரசியலில் மாறி மாறி சொறிந்து கொள்வதற்கு இடம் இல்லை என்பதால் இருவரும் இப்படி தங்களுக்குள் முரண்பட்டு, ஊடல் கொண்டு, முறுகிக் கொண்டு, பின்னர் கூடி முயங்கப் பெற்றார்களோ என்னவோ...?

அவர்களின் தமிழ்த் தேசியக் கட்சியில் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை எல்லோரும் அறிந்தது தான்.

ரெலோவில் இருந்து பிரிந்து, வெளியேறி, இருவரும் சேர்ந்து இக்கட்சியை சுயமாக உருவாக்கினார்கள். இந்த அடிப்படையில் கட்சியின் கனதி யாது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். 'தம் வளைக்குத் தாமே அதிபதி என்பதால்' அவர்கள் இருவரும் சேர்ந்து தமக்கென அமைத்துக் கொண்ட தனி வளைதான் கட்சி.

அக்கட்சியின் செயலாளர் பொறுப்பிலிருந்து சிவாஜிலிங்கம் நீக்கப்பட்டார் என்று முதலில் நேற்று ஊடகங்களில் செய்தி வெளியாகியது. ஊடல் பற்றிய தகவல் அதுதான்.

பின்பு, அதைக் கட்சித் தலைவர் ஸ்ரீகாந்தாவும், பொதுச் செயலாளர் சிவாஜிலிங்கமும் மறுத்தனர் என்று இன்னொரு செய்தி வெளியாகியது. இது கூடலின் பின்னரான தகவல்.

உண்மையைக் கேட்டறிய ஸ்ரீகாந்தாவைத் தொடர்பு கொள்ள முயன்றேன். முடியவில்லை. அடிக்கடி சுகவீனமாகும் வயதிலும், கட்டத்திலும் அவர் இருக்கின்றமையினால் நேற்று இரவு தொலைபேசியில் அவரைப் பிடிக்க முடியாமல் போயிற்றோ... என்னவோ...?

அச்சமயம் விடயம் அறிந்த நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். எதுவும் தெரியாதவர் போல வினாத் தொடுத்தார்.

"என்னத்துக்காக சிவாஜியைப் பதவியில் இருந்து நீக்கினார்களாம்?" – இது அவர் கேள்வி.

"தெரியவில்லை. கட்சித் தலைமையின் கொள்கையை மீறி தம்பாட்டில் அறிக்கை விட்டவராம் சிவாஜியர். அதுதான் என்று சில இணையதளங்களில் செய்தி போட்டிருக்கினம்..." இது என் பதில்.

"ஹா...ஹா..!" என்று கொக்கட்டம் விட்டு நீண்ட சிரிப்புச் சிரித்தார் என் நண்பர்.

"உருப்படியான ஒரே கொள்கை இருந்தால்தானே அதை மீறுவது எண்டு சொல்வதற்கு..? கொள்கையும் இல்லை, உறுப்பினர்களும் இல்லை. இதற்குள் கொள்கையை மீறிய உறுப்பினர்களை நீக்குவது எப்படி?" – என்று கேள்வி எழுப்பினார் அவர்.

நான் பதில் சொல்லவில்லை.

ரெலோவோ, கூட்டமைப்போ... எது எண்டாலும் அவற்றில் எல்லாம் தம்பாட்டில் – சுய இச்சைப்படி – இயங்கியவர் சிவாஜியார். காட்டாறு போல அவருக்குக் கரை இல்லை. கட்டுப்பாடு கிடையாது. அவருக்குக் கட்சி, கொள்கை, நிலைப்பாடு, ஒழுங்கு விதி, கட்டுப்பாடு என்று விதிக்க முடியாது. அவற்றை எல்லாம் அவ்வப்போது மீறுவதுதான் அவரது தனித்துவ அரசியல். அது சிவாஜியரின் அடிமுடி தெரிந்த ஸ்ரீகாந்தாவுக்கும் நன்கு புரிந்த விடயம்தான். அவரோடு (சிவாஜியோடு) சேர்ந்து கட்சி அமைத்த ஸ்ரீகாந்தாவுக்கு நூற்றுக்கு இருநூறு வீதம் சிவாஜியின் போக்கெல்லாம் தெரியும்.

சிவாஜியின் செயற்பாட்டைப் பார்த்து இப்போது 'சுடுகுது மடியைப் பிடி' என்று ஸ்ரீகாந்தா சொல்ல முடியாது; சொல்லக் கூடாது.

அவரை (சிவாஜியை) நன்றாகத் தெரிந்து கொண்டுதான் அவரைப் பொதுச் செயலாளராகச் சேர்த்துத் தனது கட்சியைத் தொடங்கியவர் ஸ்ரீகாந்தா. இப்போது குறை, குற்றம் கண்டுபிடிப்பதில் அர்த்தமில்லை என்பதுதான் எனது கருத்து.

சரி. உண்மையில் என்னதான் நடந்தது?

ரணில் – மோடி சந்திப்பை ஒட்டி எழுதப்பட்ட கடிதம்தான் இப்போதைய சர்ச்சைக்குக் காரணம்.

நமது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏனைய தலைவர்களோடு சேர்ந்து ஒரு நிலைப்பாட்டில் ஸ்ரீகாந்தா கையெழுத்திட, இந்தியாவிலிருந்து சிவாஜி தம்பாட்டில் தமிழீழத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பை வலியுறுத்தும் கடிதத்தை மோடிக்கு அனுப்பி இருந்தார்.

சிவாஜி எழுதிய கடிதத்தின் உள்ளடக்கம் – கோட்பாடு – எல்லாம் ஸ்ரீகாந்தாவுக்கும் ஏற்புடையவைதான். ஆனால் தாம் கட்சித் தலைவராக இருக்க... அந்த விடயங்களை முந்திக் கொண்டு சிவாஜி எழுதுவதா, கட்சியின் சார்பில் அவர் பகிரங்கப்படுத்துவதா என்பதுதான் ஸ்ரீகாந்தவை நெருடிய விடயம்.

இதையொட்டி ஸ்ரீகாந்தா குழம்பிப் போய் முணுமுணுத்துக் கொண்டிருந்தார் என்பதை நான் அறிந்திருந்தேன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை – அதாவது நேற்று முன்தினம் – கட்சியின் தலைமைக் குழு ஸ்ரீகாந்தா வீட்டில் கூடியது. தலைமைக் குழுவில் ஏழு பேர். சிவாஜி, ஸ்ரீகாந்தா, தேசிய அமைப்பாளர் நிஷாந்தன், கொள்கை பரப்புச் செயலாளர் ஜனா, இளைஞர் அணிச் செயலாளர் பகீரதன் மற்றும் இருவர்.

முதல் ஐவர் மட்டும் கூட்டத்துக்கு போயிருந்தார்கள். அங்கு சிவாஜியை, ஸ்ரீகாந்தா நேரடியாகக் கடிந்து கொண்டார் என்பது உண்மை. பொதுச் செயலாளராக சிவாஜி இனிமேலும் இருக்க முடியாது என்று அவர் முகத்துக்கே ஸ்ரீகாந்தா கூறியதும் உண்மை. விரைவில் கட்சியின் மாநாடு கூடி புதிய பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்படுவார் என்று ஸ்ரீகாந்த அறிவித்ததும் அங்கு நடந்தது.

ஆக, சிவாஜி கட்சியின் அடுத்த மாநாடு வரை பொதுச் செயலாளராகச் செயல்பட மாட்டார் என்ற முடிவு., அது வெளிப்படையாக அறிவிக்கப்படாமல் பேணப்படும் என்ற நிலைமைதான் கூட்டத்தில் எட்டப்பட்டதாகத் தெரிகிறது. அதையும் கூட, திட்டவட்டமான தீர்மானமாகக் கூட்டத்தில் ஸ்ரீகாந்தா அறிவிக்கவில்லை.

ஆனால் விவகாரம் எப்படியோ ஐந்து பேரில் ஒருவர் மூலம் வெளியே கசிய, ஏற்கனவே உறுப்பினர்கள் இல்லாத கட்சியில் 'பொதுச் செயலாளர்' அவுட் ஆகி, கட்சியே குட்டிச் சுவராகிவிட்டது என்ற பெயர் வரும் நிலைமை. அது வராமல் தவிர்ப்பதற்காக அப்படி ஒன்றும் பதவி நீக்க முடிவு எட்டப்படவில்லை என்று மறுக்க வேண்டிய கட்டாயம் கட்சித் தலைவருக்கு....!

எது, எப்படியோ, நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றிய மற்றைய மூவரில் ஒருவர் இன்று பகிரங்க மேடைக்கு வரக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன. மிச்சமிருக்கும் ஊத்தைகளும் பகிரங்கத்தில் கழுவி, துவைத்து, உலர விடும் அல்லது கழுவி ஊத்தும் விதத்தில் அம்சங்கள் அங்கு அரங்கேறவும் கூடும்.

## '13' குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த முயற்சி எடுத்து வருகின்றார். நாடாளுமன்றத்தில் வடக்கு மற்றும் கிழக்கு, மக்கள் பிரதிநிதிகளிடம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

ராஜீவ் – ஜே.ஆர் ஜெயவர்தன ஆகியோர் அன்று 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை கொண்டுவந்தபோது அன்றைய அமைச்சரவையில் ஓர் அமைச்சராக அங்கம் வகித்த தற்போதைய ஜனாதிபதி, இந்த அதிகாரப் பகிர்வுப் பிரச்சினைக்கு நிரந்தமான தீர்வை முன்வைப்பார் என்று எனக்கு நம்பிகை இருக்கின்றது." என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வின் மூலம் நாடு துண்டாடப்படும் என்று தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்துக்களை வெளியிடும் அதே நேரம், முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும், எமக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு மாத்திரமே வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவை இரண்டுமே இரு தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதில் மிதமான போக்குடன் இருதரப்பும் சுமூகமான கலந்துரையாடல்களை நடத்தி இப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதே இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தது என்றும் தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தை ஊடாக வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் உள்ளார். ஆனால் இதில் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வதில் மட்டும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் தீர்வுகாண முடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதிகளைப் போன்றே தெற்கில் உள்ள கடும்போக்குவாத சில சிங்களத் தலைவர்கள் வெளியிடும் தீவிரக் கருத்துக்களால் தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை என்றும் இவை பெரும்பாலும் அரசியல் நோக்கங்களில் கூறப்படலாம் என்றும் குறிப்பிட்ட அமைச்சர், இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் நம்பிக்கை வைத்து செயற்படுவதன் மூலமே இப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார். அவ்வாறான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் வேண்டுகோள் விடுத்தார்

## நாளை ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அடுத்த கட்ட நகர்வுகள் சம்பந்தமாக ஜனாதிபதி நாளை உரையாற்றவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதேசமயம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 5.30 வரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய பெருந்தோட்ட சமூகம் தற்போது எதிர்கொள்ளும் சமூக – பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## எதையும் செய்வார் ரணில்

முன்னைய கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு எதிராக நாட்டு மக்கள் மத்தியில் வளர்ந்த அதிருப்தி போல, தற்போதைய அரசுக்கு எதிராகவும் மக்கள் மத்தியில் அதிருப்தி வளரத் தொடங்கியுள்ள சூழலில்தான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவரது புலனாய்வுப் பிரிவு சமர்ப்பித்துள்ளது என்று கூறப்படும் புலனாய்வு அறிக்கை பற்றிய தகவல் வெளியாகியிருக்கின்றது.

நாட்டில் மீண்டும் - இந்த அரசாங்கத்திற்கு எதிராகவும் - போராட்டம் ஒன்றை மக்களை முன்னெடுக்கச் செய்வதற்கான தூண்டுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அந்த அறிக்கையில் புலனாய்வு பிரிவினர் ஜனாதிபதிக்கு எச்சரிக்கைத் தகவல் தெரிவித்திருக்கின்றனர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஒரு வகையில் பார்த்தால் பாவம். பொல்லைக் கொடுத்து அடியை வாங்கியவர்.

தாம் பதவிக்கு வந்ததும், காலிமுகத் திடலில் மக்கள் போராட்டம் நடத்துவதற்கு என்று விசேடமாக ஓரிடத்தை ஒதுக்கி, திறந்து வைத்தவர் அவர். அதுவே பின்னர் அவரைப் பதவியை விட்டுத் துரத்தும் போராட்டத்திற்கான மையக் களமாக மாறியது என்பது அவரது துரதிர்ஷ்டம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஓர் இராணுவ அதிகாரி. இராணுவப் போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கிய சர்வாதிகாரியும் கூட. ஆனால் அரசியல் போராட்டங்களைக் கையாளும் வல்லமை அவருக்கு இருக்கவில்லை. அதில் தோல்வி கண்டவர்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க வித்தியாசமானவர். அவர் பிரதமர் பதவியிலும் அதிகாரத்திலும் இருந்த போதும் அவரது அரசுக்கு எதிராக விடுதலைப் புலிகளின் இராணுவப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதை இராணுவ ரீதியில் அடக்குவதில் ரணில் அதிகம் ஈடுபாடு காட்டவில்லை. மாறாக, சர்வதேச வலைப் பின்னல் என்ற 'சர்வதேச அரசியல் நகர்வுத் திட்ட நடவடிக்கையையே' அவர் முன்னெடுத்தார். அதை எதிர்ப்பதற்காகவே அவரை - ரணிலை - அரசியல் ரீதியில் வீழ்த்தும் சாணக்கியத் திட்டத்தை அப்போது கனகச்சிதமாக முன்னெடுத்து வெற்றியும் கண்டார்கள் விடுதலைப் புலிகள்.

இராணுவப் போராட்டத்தையே அரசியலால் தோற்கடிக்க முயன்ற நரித் தந்திரசாலி ரணில் விக்கிரமசிங்க.

இப்போது நாட்டில் தமக்கும், தமது அரசுக்கும் எதிராக எழக்கூடிய எதிர்ப்புகளை - மக்கள் போராட்டத்தையும் - அதே போல இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்கு அவர் பின்னிற்கவே மாட்டார் என்பது உறுதி.

இந்தப் பின்புலத்தில், இனிமேல் நாட்டில் விரும்பத்தகாத பல சம்பவங்கள் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

ஆட்சி அதிகார பீடத்தின் ஜனநாயக விரோத மற்றும் அடக்குமுறை நடவடிக்கைகள் இனிமேல் இரும்புக்கரம் கொண்டு முன்னெடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்க எதுவும் செய்வார் ரணில். எந்த எல்லை வரை போகவும் அவர் பின்னிற்க மாட்டார் என்பது உறுதி.

## இந்த அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் நிலவிவரும் வறட்சி நிலைமை காரணமாக விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை பயன்படுத்தி மக்களை அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறக்கி, மீண்டும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கும் திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டாபய அரசின் காலப் போராட்டத்தின்போது செயற்பட்ட சிலர் இந்தச் சூழ்ச்சித் திட்டத்தின் பின்னணியில் இயங்கி வருகின்றனர் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பது இந்த தரப்பின் பிரதான நோக்கம் எனப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனராம்.

இந்த சூழ்ச்சி திட்டத்தின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பவை பற்றிய முழுமையான விவ்சரங்களும் அறிக்கையில் உள்ளனவாம்.

மேலும் சில ஊடக நிறுவனங்களும் இந்தச் சூழ்ச்சி திட்டத்தில் இணைந்து கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களை ஆத்திரமடையச் செய்யும் வகையில் இந்த ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி, எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிப் பிரதிநிதி ஒருவர் இந்த சூழ்ச்சி திட்டத்தின் பின்னணியில் இருக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

## பம்பலப்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் மதுவரி (கலால்) திணைக்கள அதிகாரிகள் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலபிட்டி, கரையோர (மெரின் டிரைவ்) வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மித்துள்ள குறுக்கு வீதியொன்றிலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

வான் ஒன்றில் வருகை தந்த நபர்களினால், கார் ஒன்றில் பயணித்தவர்களை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதோடு, துப்பாக்கி பிரயோகத்தை அடுத்து, வான் மற்றும் கார் ஆகியவற்றில் பயணித்தவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கி பிரயோகத்தினால் காருக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியிலிருந்து பின்னர் சில துப்பாக்கித் தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்தவர்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

## வயது வித்தியாசக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்படுகிறது.

சங்குவேலிப் பகுதியைச் சேர்ந்த ஜெகதாஸ் (வயது 54) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இக்காதலர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமது ஊரை விட்டு வெளியேறி இருந்தனர்.

இந்நிலையில் அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைப்பதாக உறவினர்கள் உறுதி அளித்ததால், அதை நம்பி இருவரும் இன்று ஊர் திரும்பியுள்ளனர். அவ்வேளை, ஊரவர்கள் குடும்பஸ்தர் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அதனால் அவர் மயக்கமடைந்த நிலையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, இடையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் சுன்னாகம் காவல்துறையினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# யால, உடவளவை தேசிய பூங்காங்கள் வறட்சியால் தற்காலிகமாக மூடப்படும்?

வறட்சி காரணமாக யால மற்றும் உட வளவை தேசிய பூங்காக்களைத் தற்கா லிகமாக மூடுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வனஜீவராசிகள் மற்றும் வன வளங் கள் பாதுகாப்பு அமைச்சின் வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு இடையில் இது தொடர்பாக விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

விலங்குகளுக்கான தண்ணீர் மற்றும் உணவு பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு பூங்காக்களை மூட வன விலங்கு அதிகாரிகள் ஏற்கனவே பரிந் துரை செய்துள்ளனர்.

சுமார் மூன்று மாதங்களாக நிலவும் வறட்சியான காலநிலையால் பூங்காக் களுக்குள் உள்ள குளங்கள் மற்றும் நீர்வழிகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.



பூங்காக்களில் உள்ள விலங்குக ளுக்கு தண்ணீர் வழங்க அதிகாரிகள் நடவ டிக்கை எடுத்தாலும், அந்த நடவடிக் கையின் நடைமுறைத்தன்மை குறித்து கவலைகள் எழுந்துள்ளன.

# பெரியமலையில் கற்களை உடைத்து அகற்றும் முயற்சிக்கு எதிராக குச்சவெளியில் ஆர்ப்பாட்டம்





திருக்கோணமலை – குச்சவெளி பெரியமலையில் கற்களை உடைத்து அகற்றும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரி வித்து அப்பகுதி பிரதேச மக்கள் நேற்று குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

பெரியமலைப் பகுதி தனியார் ஒருவ ருக்கு வழங்கப்பட்டு, அங்கு கற்கள் அகற் றுவதற்கான பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக் கப்பட்டது.

அத்துடன், அங்கு கற்கள் உடைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா கவும் அது தொடர்பில் அரச அதிகாரிகள் பராமுகமாக இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டு, குச்சவெளி பிரதேச செயலக வாயிலை மறித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு வருகை தந்த குச்சவெளி உதவி பிரதேச செயலாளர், மக்க ளின் கோரிக்கையைக் கேட்டறிந்துள் ளார்.

மேலும், இரண்டு வாரகால அவகாசம் தருமாறும், அந்தக் காலபகுதிக்குள் இந்த விடயம் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு தீர்க்கமான முடிவு பெற்றுத்தர முடியும் எனவும் உறுதியளிக் கப்பட்டநிலையில், தற்காலிகமாக ஆர்ப் பாட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

# உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய மரக்கறிகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாதாம்!

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதிமொழி

உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை அங்கீகரிக்கும் அதிகாரம் விவசாய அமைச்சுக்கு இருக்கும் வரை, உள்நாட் டில் உற்பத்தி செய்யக்கூடிய மரக்கறி களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என அமைச்சர் அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, இறக்குமதி செய்யப்படும் காய்கறிகள், பழங்கள், இறைச்சி மற்றும் முட்டைகளுக்கான தனிமைப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் விவசாய அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தப் பட்ட பிரிவினால் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக எந்த ஒரு விவசாயியும் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என விவசாய அமைச்சர் உறுதியளித் துள்ளார்.

நாட்டில் போதுமான அளவு மரக்கறி கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன எனவும், தட்டுப்பாடு இல்லை எனவும் அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

அண்மையில் உள்ளடக்கப்பட்ட சுமார் 300 பொருள்களின் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கிய பின் னர் கவலைகள் எழுந்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள போதி



லும் பல விடயங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும்.

உள்நாட்டில் விளைவிக்கக்கூடிய மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சு அனுமதி வழங்காது என வும் அமைச்சர் மேலும் தெரிவித்துள் ளார்.

# தமிழகத்தில் ஈழ அகதிப் பெண்ணை காணவில்லை என்று முறைப்பாடு

இந்தியாவிலுள்ள தமிழகம் – மண்ட பம் அகதிகள் முகாமில் இருந்த 29 வயதுடைய இலங்கைப் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தசொ பெண் கடந்த ஜீலை மாதம் 27ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என முறைப்பாடு கிடைக் கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

அவர் கடந்த வருடம்(2022) ஏப்ரல் மாதம் முதல் மண்டபம் ஏதிலிகள் முகா மில் இருந்தார் எனத் தமிழகப் பொலி ஸார் குறிப்பிடுகின்றனர்.

இதுதொடர்பில் மண்டபம் பொலிஸ் நிலையத்தில், அவரது கணவர் முறைப் பாடு செய்துள்ளார் எனவும் தமிழகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# அலம்பில் கடற்பரப்பில் 10 தமிழக மீனவர் கைது

## படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது




இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் பத்து இந்திய(தமிழக) மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்றுக் காலை கைதுசெய்தனர்.

முல்லைத்தீவு அலம்பில் கடற்பரப்பில் வைத்தே இந்த மீனவர்களை அவர்கள் பயன்படுத்திய இழுவைப்படகுடன் கடற்படையினர் கைது செய்தனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அவர்கள் பயன்படுத்திய படகுடன் திருகோணமலை துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டமையுடன் இலங்கைக் கடலோர காவற்படை ஊடாக மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் உதவி இயக்குநரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

2023 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக் கடற்படையினர் 93 இந்திய மீனவர்களைக் கைது செய்துள்ளனர். 14 இந்தியப் படகுகளையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறல்களினால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நாட்டின் கடல் வளங்களில் ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு, கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வறட்சியால் 12 மாவட்டங்களில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு




நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 12 மாவட்டங்கள் தற்போது குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதுவரை சுமார் 48 ஆயிரம் குடும்பங்கள் இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் இணைக்கப்பட்ட பௌசர்களைப் பயன்படுத்தி, 12 மாவட்டங்களுக்குள் உள்ள 40 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சத்து 56 ஆயிரம் நபர்களுக்கு குடி தண்ணீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர் தட்டுப்பாட்டால் விலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்ட சுதந்த ரணசிங்க, வனவள பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் பௌசர்கள் மூலம் நீரை வழங்குவதற்கு செயற்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் மாத்திரம் குடி தண்ணீர் வழங்குவதற்காக அரசாங்கம் சுமார் இருபது லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மருத்துவமனைகளுக்கும் குடி தண்ணீரை விநியோகிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சமனல வாவியில் இருந்து நீரை விநியோகிக்க முடிவு

## அமைச்சரவை தீர்மானத்தால் சுமுக நிலை

விவசாய நடவடிக்கைக ளுக்கு தேவையான நீரை சமனல வாவியிலிருந்து விநி யோகிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இததீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்தித் தேவை கருதி இந்த நீரை உடனடியாக விவசாயத் தேவைகளுக்கு விடுவிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டமையை அடுத்து அந்த முடிவுக்கு எதிராக – அரசின் நடவடிக்கையை ஆட்சேபித்து – பெரும் போராட்டங்களுக்கு விவசாயிகளும் பொது அமைப்புகளும் தயாராகி வந்த சூழலிலேயே நீரை விவசாயத் தேவைகளுக்கு விடுவிக்கும் முடிவை அமைச்சரவை எடுத்து இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு எட்டும் சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது.

# நீதியரசர்கள் பதவியேற்பு




மேல் நீதிமன்ற நீதிபதி சஞ்சீவ மொராயஸ், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணா மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராகப் பொறுப்பேற்றார்.

இருவரும் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பத விப்பிரமாணம் செய்துகொண்டனர்.

# பாலியல் லஞ்சத்துக்கு வற்புறுத்திய சமூர்த்தி உத்தியோகத்தர் கைது!

## சாய்ந்தமருது பொலிஸார் நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

ஆணுறுப்பை "வட்அப்ஸ்" செயலியின் ஊடாக குடும்ப பெண்ணிற்கு காட்டி, தையல் மெஷின் உட்பட சலுகைகள் பல தருவார் எனக் கூறி பாலியல் தொந்தரவு மேற்கொண்டார் என்று கூறப்படும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வசிக்கின்ற இரு பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண்ணிடம் பல சலுகைகளைப் பெற்று தருவார் என ஆசை வார்த்தைகள் கூறியமையோடு, தனது ஆணுறுப்பைப் படம் எடுத்து குடும்ப பெண்ணின் வட்அப்ஸ் செயலியின் ஊடாக அப்பெண்ணின் கைத்தொலைபேசிக்குத் தொடர்ச்சியாக அனுப்பி, பாலியல் சேட்டை செய்து வந்தவர் என்று கூறப்படும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான முறைப்பாடு ஒன்று நேற்றுக் கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஐயூப் தலைமையிலான பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபரான 41 வயது மதிக்கத்தக்க சாய்ந்தமருது பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரான சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பல்வேறு திருமணங்கள் செய்துள்ளமையுடன் இவ்வாறு கணவன் அற்ற பல்வேறு பெண்கள் மற்றும் தனிமையில் உள்ள பெண்களை நாடி, தனது இச்சைக்காக ஆசை வார்த்தைகளை கூறி, பாலியல் லஞ்சம் பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபரை இன்று கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வழிப்பறி, சங்கிலி அறுப்புக் கும்பலை வவுனியாவில் மடக்கினர் பொலிஸார்!

## 6 பேர் கைது: கார், இரண்டு மோட்டர் சைக்கிள்களும் மீட்பு

(வி.வசந்தரூபன்)

வவுனியா, ஓக.08

வவுனியாவில் பல்வேறு இடங்களில் வீதியில் வழிமறித்து நகைகள் கொள்ளையிட்ட சம்பவங்கள் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கார் மற்றும் இரண்டு மோட்டர் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என நெளுக்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியாவில் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுச் சம்பவங்கள் மற்றும் வீதிகளில் செல்வோரிடம் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து கடந்த ஆறு மாதங்களாகப் பக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

வவுனியாவின் நெளுக்குளம், பம்பைமடு, வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் வீதிகளில் செல்வோரை வழிமறித்து சங்கிலி அறுக்கப்பட்டதாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலும், தம்பனை பகுதியில் வீதியில் சென்ற பெண்ணை வழிமறித்து சங்கிலி அறுக்கப்பட்டதாக பறயனாலங்குளம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுக பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையில் பறையனாலங்குளம், தம்பனை பகுதியில் சங்கிலி அறுத்தமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் பீ.அம்பாவிலவின் வழிகாட்டுதலில் நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திருல்பெல தலைமையிலான பொலிஸாரும், பறையனாலங்குளம் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் கசூனவும் இணைந்து முன்னெடுத்த விசாரணைகளில் இந்தச் சம்பவங்களை ஒரு குழு திட்டமிட்டு மேற்கொண்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அக்குழுவைச் சேர்ந்த 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் எதக் குற்றச் செயல்களை செய்யப் பயன்படுத்திய கார் ஒன்றும், இரண்டு மோட்டர் சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

தம்பனை பகுதியைச் சேர்ந்த இருவரும், பெரியதம்பனை பகுதியைச் சேர்ந்த இருவரும், வவுனியா குட்செட் வீதி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவருமாக 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் இந்த 6 பேரையும் நீதிமன்றில் முறைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட காரில் வைத்தியசாலை சேவையில் பணியாற்றுபவர்கள் பயன்படுத்தும் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# மாணவர்கள் மன அழுத்தங்களில் இருந்து மீள வீட்டுத்தோட்டம் சிறந்த பரிகாரமாக அமையும்

## மாணாக்க உழவர் நிகழ்சியில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு





எமது மாணவர்கள் பல்வேறு காரணங்களால் மன அழுத்தங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே அவர்களால் சரிவரக் கற்றலை மேற்கொள்ள முடியவில்லை. போதை, வன்முறை என்று சமூகப்பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் ஒருசாரார் தற்கொலை முடிவை நோக்கியும் செல்கிறார்கள்.

இவர்களை மனஅழுத்தங்களில் இருந்து விடுவிக்க வீட்டுத்தோட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதுதான் சிறந்த பரிகாரமாக அமையும். இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட வழிமுறையாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணாக்க உழவர் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் செயன்முறைப் பயிற்சிகளையும் வழங்கும் நிகழ்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை (06.08.2023) நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு–

வீட்டுத்தோட்டங்கள் சுயசார்புப் பொருளாதாரத்தின் முதற்படி. வீட்டிலேயே எங்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருப்பதோடு வீட்டுக்கழிவுகளைப் பசளையாகப் பயன்படுத்துவதால் நஞ்சற்ற உணவையும் நாம் பெறக் கூடியதாக உள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும், உணவு நெருக்கடிக்கும் வீட்டுத்தோட்டம் சிறந்த தீர்வாக அமையும். இந்த அனுகூலங்களை விட மேலான அனுகூலமாக வீட்டுத் தோட்டங்கள் மனதை அலைபாய விடாமல் சிந்தனைகளை ஒருமுகப் படுத்தவும் உதவுகின்றது.

தோட்டங்களில் மண்ணைக் கைகளால் அளையும்போது, மண்ணில் உள்ள பக்றீரியங்களைத் தொடும்போது உடலில் செரற்ரோனின் என்ற ஓமோன் சுரப்பது தூண்டப்படுகிறது. ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை. செரற்ரோனின் மனச்சோர்வைக் களைந்து, மனஅழுத்தங்களில் இருந்து விடுபடவைத்து, மனஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு இரசாயனம் ஆகும். இயற்கையாக செரற்ரோனின் உருவாகுவதைத் தூண்டும் வீட்டுத்தோட்டச் செய்கையில் மாணவர்களை ஈடுபடுத்–தினால் செயற்கையாக உற்சாகத்தைத் தூண்டும். ஆபத்தான போதைக்கு அவர்கள் அடிமையாக மாட்டார்கள்.

ஆசிரியர்கள் வீட்டுத்தோட்டம் என்றால் அது விவசாயம் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம்தான் என்று நினைக்கிறார்கள். பெற்றோர்கள் வீட்டுத் தோட்டங்களில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்களின் படிப்புப் பாழாகிவிடும் என்று கருதுகிறார்கள். இந்த மனோநிலைகளில் மாற்றம் வேண்டும்.

பயிர்களைப் பீடிக்கும் பூச்சிகளால் பயிர்களுக்கு மாத்திரம்தான் சேதம். ஆனால், புத்தகப் பூச்சிகளாகவே வளரும் மாணவர்கள் தமக்கும் சமூகத்துக்கும் கேடாகவே அமைவார்கள். இதைப் புரிந்துகொண்டு ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களை வீட்டுத் தோட்டங்களில் ஈடுபடவைக்க வேண்டும் .–என்றார்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பிரச்சினை தொடர்பில் போராட்டம்

## அம்பாறை அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத் தலைவர் தெரிவிப்பு



(நவாஸ்)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடைய சம்பள கட்டமைப்பு மற்றும் நீண்ட கால தொழில் சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் தேசிய ரீதியில் பல்வேறு தொழிற்சங்க போராட்டம் அடுத்த வாரம் முதல் இடம்பெறவுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளக் கட்டமைப்பு மற்றும் நாளாந்த அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு ஏனைய தொழில்சார் பிரச்சினைகள் பற்றிய பிரதேச செயலக ரீதியான தொழிற்சங்க கூட்டம் ஒன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று (7) இடம்பெற்றது.

இதன்போது அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் கே. எம். கபீர் இந்தப் போராட்ட ஏற்பாடுகள் தொடர்பில் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்துக்குத் தேசிய இணைந்த சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க மத்திய நிலையத்தின் செயலாளர தம்மிக முனசிங்க வருகை தந்தார். அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பிரசன்னமாகி இருந்தனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடைய சம்பள கட்டமைப்பை எம்.என்.5 ஆக மாற்றுதல் மற்றும் நீண்ட கால தொழில் சார் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் தொடர்பில் தேசிய ரீதியில் பல்வேறு பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்கள் எதிர்வரும் வாரங்களில் இடம்பெறவுள்ளன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதில் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களில் சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இன மத மொழி வேறுபாடின்றி ஒட்டுமொத்த பங்களிப்பை வழங்க வேண்டும். எமது தொழில் சார் உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் முன்வர வேண்டும் என்று தேசிய இணைந்த சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் தம்மிக முனசிங்க கருத்து தெரிவித்தார்.

# பழைய மாணவர்கள் ஒன்றுகூடல்





(நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் 1988 பழைய மாணவர்கள் ஒன்று கூடும் நிகழ்வு கல்முனை மாவட்ட நீதிபதி எம் எஸ் எம். சம்சுதீன் தலைமையில் அண்மையில் (05.08.2023) அட்டாளைச்சேனை ஹனிபா மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு பகல், இரவு என இரு அமர்வுகளாக 150 இற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களுடன் இடம்பெற்றது.

இரண்டாம் அமர்வு மாலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை இடம் பெற்றது. ஒன்று கூடலில் சங்கீதக் கதிரை, முட்டி உடைத்தல் மற்றும் சிறுவர்களுக்கான கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட சுவாரஸ்யமான பல நிகழ்வுகள் இடம் பெற்றன. இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிகப்பட்டன.

# பொத்துவில் தொகுதியில் ஐ.தே.கவின் பணிமனை





(கே எ ஹமீட்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான மக்கள் பணிமனை திறந்து வைக்கும் நிகழ்வும், மக்கள் சந்திப்பும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (06) மாலை அட்டாளைச்சேனையில் இடம்பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான அமைப்பாளர் யூ.கே.ஆதம்லெப்பை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மக்கள் பணிமனையைத் திறந்து வைத்தார்.

முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகே, ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனை தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.எம்.ஜெமீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கட்சிக்கான பொத்துவில் தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார உரையாற்றும்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் பொத்துவில் தொகுதி, கல்முனைத் தொகுதி, சம்மாந்துறைத் தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெற்று அதன் உறுப்பினர்களே நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தனர்.

இனத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சிகள் இன்று இனவாத, மதவாத, பிரதேச வாதங்களை கட்டவிழ்த்துவிட்டு தேசிய ஒருமைப்பாட்டை இல்லாமல் செய்துவிட்டன.

தேசத்தின் ஒற்றுமைக்காகவும், நலனுக்காகவும் பெரும் பங்களிப்புச் செய்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும்.- என்றார்.

இங்கு தயா கமகே உரையாற்றும் போது, அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பலம் பொருந்திய சக்தியாகக் காணப்பட்டது. ஆனால் நமது தலைவர்களின் செயற்பாட்டால் ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் காங்கிரசுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது. -என்றார்.

# யாழ். மாவட்டத்தில் வறட்சியால் எழுபதாயிரம் பேர்வரை பாதிப்பு



## அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் தகவல்

வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக யாழ் மாவட்டத்தில் 69 ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது யாழ் மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கூடுதலாக சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

அந்த வகையில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 15 ஆயிரத்து 965 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 160 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 135 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 160 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 028 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 146 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 956 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 067 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குடிநீர் விநியோகத்திற்காக தற்போது 6 ஆயிரத்து 53 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 704 பேருக்கு உரிய உதவி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

# பட்டிருப்புப் பாலம் ஊடாக பயணிப்பதில் மக்கள் அவதி!



(பழுவூரான்)

படுவான்கரையையும் எழுவான் கரையையும் இணைக்கும் முக்கிய பாலங்களில் ஒன்றாகக் காணப்படும் பட்டிருப்புப் பாலம் பழுதடைந்துள்ளது.

இதனால் இந்தப் பாலத்தின் ஊடாக வாகனங்களில் பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்தப் பாலத்தில் இருந்து பெரிய போரதீவுச் சந்தி வரையிலான பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இதனால் இப்பாதையூடான போக்குவரத்திலும் தாம் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த நிலைமையைச் சீர் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமென பொதுமக்கள் மற்றும் அரச துறை ஊழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# திராய்க்கேணிப் படுகொலைக்கு நீதி கிடைக்க வேண்டும்!

## 33 ஆவது நினைவேந்தலில் கலையரசன் எம்.பி. கோரிக்கை



(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த 33 வருடங்களுக்கு முன்பு ஏதுமறியாத 54 அப்பாவித் தமிழ் மக்கள் குரூரமாக கொலை செய்யப்பட்டமையை உலகறியும். எனினும் இதுவரை அந்தப் படுகொலைக்கு நீதி கிடைக்கவில்லை. சர்வதேசம் தலையிட்டு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு திராய்க்கேணி படுகொலையின் 33 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றும் போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கோரிக்கை விடுத்தார்.

திராய்க்கேணி படுகொலையின் 33 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் (06) ஞாயிற்றுக்கிழமை மாலை சமூக செயற்பாட்டாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் திராய்க்கேணி சித்திவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மேலும் பேசுகையில் –

திராய்க்கேணி தமிழ் மக்கள் இன்னும் பல சவால்களுக்கும் நெருங்குவாரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு 33 வருடங்களுக்கு முன்பு இழைக்கப்பட்ட உலகறிந்த அநீதிக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. நிவாரணம் கிடைக்க வில்லை. நாங்கள் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றோம் .ஆனால் இன்னும் நில ஆக்கிரமிப்பும் அவர்களது இருப்பை இல்லாமல் செய்யும் வேலைகளும் தொடர்கின்றன .

தமிழ் மக்களை இறைவன் தான் காப்பாற்ற வேண்டும் என்று எமது தலைவர் கூறியது போன்று அந்தத் துர்பாக்கிய நிலைக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் .

தொடர்ந்து வந்த அரசுகள் இந்த மக்களின் வாழ்வாதாரத்துக்குக் கூட எதுவுமே செய்யாமல் நீதியை வழங்காமல் புறக்கணித்து வந்திருக்கின்றன. அதனால் அவர்கள் இன்றும் பலமின்றி ஏதோ வாழ்ந்து வருகிறார்கள் .

எனவே இந்த இனப்படுகொலைக்கு நீதியான விசாரணை வேண்டும். அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் . ஏதோ பூர்வீக நிலத்தையாவது தக்க வைக்க வேண்டும் என்பதற்காக அந்த மக்கள் இன்று நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறார்கள். – என்றார்.

அங்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சமூக செயற்பாட்டாளர் தா. பிரதீபன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.08.2023




இன்று மகிழ்ச்சியான மனநிலையை வளர்த்துக்கொள்வது முக்கியம். கவலைப் படுவதையும் உணர்ச்சிவசப்படுதலையும் இன்று தவிர்க்க வேண்டும்.

இன்று வேலைப் பளு அதிகமாகக் காணப்படும். பணிகளில் திட்டமிடல் அவசியம். உண்மையான உழைப்பு வெற்றியைப் பெற்றுத் தரும்.

உணர்ச்சி வசப்படுதலை தவிர்ப்பதன் மூலம் உறவில் பாதிப்புகளை தவிர்க்கலாம். நட்பு முறையுடன் பழகினால் நல்ல புரிந்துணரவு வளரும்.

பணவரவு அதிகமாக காணப்படும். இன்று தேவையில்லாத செலவினங்களும் ஏற்படலாம். எனவே உங்களால் செலவை கட்டுப்படுத்த இயலாது.

உங்கள் துணையாரின் உடல் நிலை பற்றிய கவலைகள் ஏற்படலாம். மூக்கு வாய் தொண்டை சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




மன அழுத்தத்தை விரட்ட உற்சாகத்தை கடைபிடிக்க வேண்டிய நாள். இன்று கவனக்குறைவு ஏற்படலாம். எதையும் எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியிட அழுத்தம் காரணமாக பணியில் தொய்வு ஏற்படலாம். பொறுமையை கடைபிடிப்பதன் மூலம் திறமையாக பணிகளை கையாளலாம்.

நட்புடன் பழகுவதன் மூலம் துணையாருடன் நல்லுறவு மேம்படும். அவரின் விருப்பப்படி செயல்படுவதன் மூலம் சந்தோஷம் கிட்டும்.

இன்று பணவரவு திருப்திகரமாக இல்லை. கூடுதல் செலவினங்கள் கவலையை ஏற்படுத்தும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளுமையான உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். நீங்கள் செய்யும் செயலை சரியாக முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் சரியானதாக இருக்கும்.

இன்று வேலையில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உங்களின் தனிப்பட்ட திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை பேச்சால் உங்கள் துணையாரை கவர்வீர்கள். ஆதனால் அன்யோன்யம் பெருகும்.

இன்று பணவரவு உற்சாகத்தைத் தரும். அதிக பணவரவால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக உள்ளது. ஆரோக்கியமான மன நிலையால் உங்கள் உடல் நிலை நன்கு பராமரிக்கப்படும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். முன்னேற்றமும் திருப்தியும் நிறைந்த நாளாக அமையும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

இன்று பணியிடத்தில் அமைதி நிலவும். உற்சாகத்துடனும் உடனுக்குடனும் வேலை செய்வீர்கள். அதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் வெளியிடங்களுக்குச் செல்வீர்கள்.

இன்று பணவரவு காணப்படும். பணவரவு உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் சந்தோஷமான மனநிலை உங்களுக்கு ஆரோக்கியத்தை பெற்றுத் தரும். இன்று உங்கள் உடல் நிலையில் எந்தக் குறைபாடும் இருக்காது




இன்று யதார்த்தமாக செயல்பட வேண்டிய நாள். பெரிய எதிர்பார்ப்புகளுடன் செயலாற்றாதீர்கள். ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

இன்று அதிக பணிச்சுமை காரணமாக பணியை திறம்பட செய்வதில் சில தடைகள் இருக்கும்.

கணவன் மனைவி இடையே உணர்ச்சி வசப்படாமல் செயலாற்ற வேண்டும். அதன் மூலம் நல்லுறவையும் மகிழ்ச்சியையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று கூடுதலாகச் செலவு செய்ய நேரிடலாம். எனவே இன்று செலவுகளை சமாளிப்பதில் சிறிது கஷ்டம் இருக்கும்

ஆரோக்கியம் திருப்திகரமாக இல்லலை. மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் கவலைகளால் பாதிக்கப்படும் நாள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் நீங்கள் உணர்ச்சி வசப்படாமல் இருந்து அமைதி பெறலாம்.

சவால்களை எதிர்கொள்ளும் நாள். இன்று ஓய்வின்றி உழைக்க வேண்டியிருக்கும். நன்கு பணியாற்ற அட்டவணை அமைத்து பணியாற்றுங்கள்.

உங்கள் துணையாரிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதை தவிர்ப்பதன் மூலம நல்லுறவை வளர்க்கலாம்.

இன்று வீட்டுத் தேவைகளுக்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவைகள் அதிகரிக்கும். அதனால் செலவும் அதிகரிக்கும்.

தாயாரின் ஆரோக்கியததுக்காகச் செலவு செய்ய நேரிடும் அதனால் கூடுதல் செலவுகள் நேரலாம்.




இன்று உங்கள் முயற்சிகள் வெற்றியடையும் நாள். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் மனது நிறைந்திருக்கும் நாள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணிவான மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையாரை சந்தோசப்படுத்துவீர்கள். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் பெருகும்.

பணவரவு திருப்திகரமாக அமையும். உங்கள் கடின உழைப்புக்கான போனஸ் அல்லது ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். உங்கள் சந்தோஷமான மனநிலை காரணமாக ஆரோக்கியம் மேம்படும்.




இன்று உங்கள் மனதில் நம்பிக்கை நிறைந்திருக்கும். இன்றைய நாளில் நீங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். இன்று மேற்கொண்ட காரியங்கள் அனைத்தும் எளிதாக நடக்கும்.

மேற்கொண்ட பணிகளை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை எளிதாகச் செய்ய இயலும்.

உங்கள் துணையுடன் சந்தோசமான தருணங்களை பகிரந்து கொள்வீர்கள். குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு விடயத்தைப் பற்றிக் கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு கிடைக்கும்.

இன்றைய நாள் ஆரோக்கியமான நாளாக உங்களுக்கு அமையும். சந்தோசம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.08.2023




இன்று சில அசௌகரியங்கள் ஏற்படலாம். பொறுமையும் நேர்மறை எண்ணங்களும் இருந்தால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திறமையாகச் செயல்பட அட்டவணையிட்டு திட்டமிடல்அவசியம்.

குடும்ப விஷயங்கள் காரணமாக கணவன் மனைவிக்குள் சச்சரவு ஏற்படும். எனினும் உங்கள் சரியான அனுகுமுறை மூலம் அதை தடுக்கலாம்.

கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம். உங்கள் தேவைகளை சந்திக்க சிறு கடன்களை வாங்க நேரிடலாம்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியான மன நிலை இருக்கும். உங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றுவீர்கள் முக்கியமான முடிவுகள் எடுப்பதன் மூலம் நன்மை கிட்டும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள்.

உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பாராட்டுக்களை பெறுவதற்கான நல்ல வாய்ப்பு இன்று அமைந்துள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். நல்ல புரிந்துணர்வின் மூலம் நல்லுறவை வலுப்படுத்தலாம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் நன்கு பணம் சம்பாதிக்க இன்றைய நாள் மிகவும் அதிர்ஷ்டமான நாள்.

இன்று ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். மனதை சிந்தனையின்றி ஓய்வாக வைத்திருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று யதார்த்தமாக இருக்க வேண்டிய நாள். உங்கள் காரியங்களை மேற்கொள்வதில் சில தடைகள் நேரலாம்.

அனுசரித்து போவதன் மூலம் திறம்பட பணியாற்ற முடியும். நன்கு திட்டமிட்டு செயல்பட்டால் உங்கள் திறமை அதிகரிக்கும்.

கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு இருக்கும். அது நல்லுறவை பாதிக்கும்.

நிதிநிலைமை கவலை தரும் வகையில் இருக்கும். தேவையற்ற செலவுகள் குடும்பத்தில் ஏற்படும்.

உங்கள் உணவில் கவனமாக இருக்க வேண்டும். உணவு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் உங்களுக்கு மிதமான பலன்களையே தரும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். இன்று நண்பர்கள் கூட உங்கள் விரோதிகளாக மாற வாய்ப்புண்டு.

இன்று கடமைகள் அதிகமாக காணப்படும். ஓய்வின்றி உழைக்க நேரலாம். சிறந்த முறையில் பணியாற்ற நல்ல உத்தியைக் கையாளுங்கள்.

உங்கள் பாதுகாப்பு நிலைமை பற்றி உங்கள் துணையாருடன் விவாதிக்காதீர்கள். அதனால் உறவு பாதிக்கப்படும். மேலும் கருத்து வேறுபாடுகள் உருவாகலாம்.

இன்று பண வரவும் செலவும் கலந்து காணப்படுகின்றது. பணத்தை மிச்சப்படுத்தி சேமிக்க வேண்டியது அவசியம். இன்று நீங்கள் கால் வலியால் பாதிக்கப்படலாம். இறைவழிபாடு மற்றும் தியானம் நல்ல பலன்களைத் தரும்.







# 4 மாதங்களுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் ராகுல்!

## - 'ஜிந்தாபாத்' முழங்க அமோக வரவேற்பு



தகுதி இழப்பு ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடப்பு மழைக்கால கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ராகுல் காந்தி 4 மாதங்களுக்கு பின்னர் நேற்று நாடாளுமன்றம் சென்றார்.

அவரை 'ராகுல் காந்தி ஜிந்தாபாத்' என முழங்கி எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி நாடாளுமனற உறுப்பினர்கள் வரவேற்றனர்.

மோடி பெயர் குறித்த அவதூறு வழக்கில் காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தியின் 2 ஆண்டு சிறைத் தண்டனைக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்ததை அடுத்து, ராகுல் காந்தியின் தகுதி இழப்பை மக்களவைச் செயலகம் ரத்து செய்தது.

இதனைத் தொடந்து நடப்பு மழைக்கால கூட்டத்தொடரில் பங்கேற்கும் விதமாக நேற்று பகல் 12 மணிக்கு ராகுல் காந்தி நாடாளுமன்றம் சென்றார். அவரை வரவேற்கும் விதமாக 'இண்டியா' கூட்டணி தலைவர்கள் 'ராகுல் காந்தி ஜிந்தாபாத்' என கோஷம் எழுப்பி வரவேற்றனர்.

ராகுல் காந்தியின் நாடாளுமன்ற மறுவருகையைக் கொண்டாடும் விதமாக காங்கிரஸ் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியே இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர். முன்னதாக, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு ராகுல் காந்தி மரியாதை செலுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 30 நாட்களில் 34 மீனவர்கள் கைது: ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்!



கடந்த 30 நாட்களில் மட்டும் 3 வெவ்வேறு சம்பவங்களில் 34 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை சிறையில் தடுத்துவைக்கப் பட்டுள்ள மீனவர்களை மீட்டு, தாயகம் அழைத்துவரத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவது மிகுந்த கவலையளிக்கிறது.

இந்த ஆண்டு மட்டும் இதுவரை 93 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 14 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த 30 நாட்களில் மட்டும், 3 வெவ்வேறு சம்பவங்களில், 34 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள், பல தலைமுறையாக மீனவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, அவர்களுக்கான வாழ்வாதாரத்தையும் வழங்கி வருகிறது. இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், மீனவ மக்களுக்கு பெரும் துன்பத்தையும், துயரத்தையும் அளிக்கிறது.

இலங்கை சிறையில் வாடும் 19 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்து, அவர்களை தாயகம் அழைத்து வரத் தேவையான தூதரக நடவடிக்---கைகளை மேற்கொள்ள வேண்டும். பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களை பாதிக்கும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினை காண வேண்டும். வெளியுறவுத் துறை அமைச்சரின் தலையீடும், ஆதரவும், இந்தப் பிரச்சினையை விரைவாகத் தீர்த்து, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் பெரும் நிம்மதியைத் தரும் என நம்புவதாக அக்கடிதத்தில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

# மணிப்பூரில் விவகாரம்: 12 வழக்குகளில் சி.பி.ஐ. விசாரணை!

கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூரில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்புடைய 12 வழக்குகளை சி.பி.ஐ. விசாரிக்கும் என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மணிப்பூர் வன்முறை தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்ற அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. மத்திய மாநில அரசுகள் சார்பாக சட்டமா அதிபர் வெங்கட்டரமணி மற்றும் சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தா ஆகியோர் ஆஜராகினர்.

வழக்குகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுக்களை அமைக்க மாநில அரசு பரிந்துரைத்துள்ளது. அரசு நிலவிவரும் சூழலை மிகவும் கவனமுடன் கையாண்டு வருகிறது என சட்டமா அதிபர் இதன்போது தெரிவித்தார்.

சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா கூறுகையில், மணிப்பூரில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்புடைய அனைத்து வழக்குகளையும் சி.பி.ஐ. விசாரிக்கும்.

இந்த விசாரணையின்போது ஏதேனும் வழங்குகள் தெரியவந்தால், அதனை யும் சி.பி.ஐ. விசாரிக்கும் என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆயுத உற்பத்தியை அதிகரிக்குமாறு வட கொரியா ஜனாதிபதி உத்தரவு!

வட கொரியாவின் எச்சரிக்கையை மீறி தென் கொரியா அமெரிக்க படைகளுடன் இணைந்து போர் பயிற்சிகளை மேற் கொண்டு வருகிறது.

எனவே தென் கொரியாவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வட கொரிய தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் வட கொரியாவின் முக்கிய ஆயுத தொழிற்சாலைகளில் அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

ரொக்கெட் லொஞ்ச்சர்கள், ஏவு கணைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஆகியவற்றை



ஆய்வு செய்த அவர், நாட்டின் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் விதமாக ஆயுத தொழிற்சாலைகளில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

## பிரித்தானியாவில் வேகமாக பரவும் புதிய வகை வைரஸ்!




பிரித்தானிய முழுவதும் 'எரிஸ்' என்ற குறியீட்டுப் பெயருடன் இ.ஜி 5.1 என அழைக்கப்படும் புதியவகை கோவிட் தொற்று வேகமாக பரவி வருகின்ற நிலையில் குறித்த வைரஸ் தாக்கமானது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் நிலவும் மோசமான காலநிலை காரணமாக அங்கு அதிக அளவிலான மக்களுக்கு தலைவலி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வைரஸ் தொற்று அதிகமான மக்களிடம் வேகமாக பரவி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து பிரித்தானியாவின் சுகாதார பாதுகாப்பு முகவரகம் இது தொடர்பில் ஆராய்ந்த போது இது ஒமிக்ரோனின் மாறுபாடு அடைந்த வைரஸ் கிருமி என கண்டறியப்பட்டது.

மேலும், இந்த வைரஸ் பிரித்தானியாவில் 7 பேரில் ஒருவருக்குப் பரவியிருப்பதாகவும், இதற்கு கிரேக்க தெய்வத்தின் பெயரான எரிஸ் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பங்களாதேஷில் டெங்கு காய்ச்சல்: 300 பேர் பலி!



ஒவ்வொரு வருடமும் ஜுன் முதல் செப்டம்பர் மாதம் வரை பங்களாதேஷில் பருவமழைக் காலமாக கருதப்படுகிறது.

பருவமழைக் காலத்தில் அதிக அளவு நோய் பாதிப்புக்கு உள்ளாகும் நாடாகவும் பங்களாதேஷ் காணப்படுகின்றது.

இதன்படி, கடந்த ஜுன் மாதம் அதிக அளவு மழைப்பொழிவு ஏற்பட்டதால் பங்களாதேஷ் முழுவதும் டெங்கு காய்ச்சல் மிக வேகமாக பரவி வருகிறது.

நடப்பாண்டில் ஜனவரி முதல் இதுவரை அந்த நாட்டில் 64 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சல் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும் 303 பேர் தீவிர காய்ச்சல் பாதிப்பால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மட்டும் 2,000க்கும் மேற்பட்டோர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

மருத்துவமனைகளில் பலர் சிகிச்சைப் பெற்றுவரும் நிலையில் நோய் பாதிப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுகாதாரத்துறை தரப்பில் கூறப்படுகிறது.

## உக்ரைன் ஜனாதிபதியை கொலை செய்ய முயற்சி!

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை கொலை செய்ய ரஷ்யா மேற்கொண்ட முயற்சியை முறியடித்துள்ளதாக உக்ரைன் பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் முன்கூட்டியே அறியப்பட்டமையினால் ஜெலென்ஸ்கியை பாதுகாப்பாக வைத்திருக்க முடிந்ததாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், ஜெலென்ஸ்கியின் இருப் பிடத்தை ரஷ்யாவிற்கு வழங்க முயன்ற கூட்டாளியை கைது செய்துள்ளதாகவும் உக்ரைனின் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலில் உளவாளியாக செயற்பட்ட பெண் ஜெலென்ஸ்கியின் வருகையின் நேரத்தையும் வழியையும் கண்டுபிடிக்க பல முயற்சிகளை முன் கூட்டியே அவருக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டிருந்தது.